# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO-I COURT, PADMANABHAPURAM

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 121/2024 P.W.2/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜெயக்குமார் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. வேலாயுதம் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.05.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர்.**

1. நான் தற்பொழுது மார்த்தாண்டம் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் 2020 ம் வருடம் நான் கொற்றிகோடு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த பொழுது 25.04.2020 ம் தேதியன்று நான் பணியில் இருந்த பொழுது நானும் என்னுடன் பணிபுரிந்த தலைமை காவலர் 1871 ஜுகின் காந்த் என்பவரும் உதவி ஆய்வாளரர் திரு.ரஜிஸ் என்பவருக்கு உதவியாக முட்டைக்காடு சரல்விளை குருசடி அருகே இரவு 08.00 மணிக்கு வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்த பொழுது TN75AA7763 மகேந்திரா பிக்கப் என்ற வாகனத்தை ெஹர்லின் கில்பர்ட், த/பெ.ஏசா என்பவர் எந்தவொரு அரசு அனுமதியும் இல்லாமல் 1/4 யூனிட் கனிமவள மணலை சரல்விளைக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப் போவது தெரியவந்தது. அதன் மதிப்பு சுமார் 250 இருக்கும்.

2. எனவே உதவி ஆய்வாளர் மேற்படி நபரை கைது செய்து அந்த மணல் மற்றும் வண்டியை அத்தாட்சியின் மூலம் கைப்பற்றினார். அத்தாட்சியில் பொதுமக்கள் யாரும் சாட்சியாக கையொப்பம் இட முன்வராததால் போலிஸ் பார்ட்டியாக நானும் தலைமை காவலர் 1871 ஜுகின் காந்த் ஆகியோரும் கையொப்பம் செய்தோம். மேலும் வழக்கு சொத்துக்கள் சகிதம் நிலையம் கொண்டுச்

சென்று வழக்கு பதிவு செய்வதற்கு உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். நீதிமன்றத்தில் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த **அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Padmanabhapuram (FAC).